# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2042 (கார்த்திகை–மார்கழி) டிசம்பர் 2011 ஏர்-26, உழவு-12, விலை ரூ.10.00



ஆசிரியர், வெளியிடுபவர் :
பரணி கே.பாலசுப்பிரமணி
"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744
செல் : 9381545452


## கொங்கு நண்பர்கள் சங்கம்


"தீரன் சின்னமலை மாளிகை"
72, பீட்டர்ஸ் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351744
Cell : 93821 55581

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
Fax : 044-28351244



| | |
|---|---|
| தலைவர் | : பரணி கே.பாலசுப்பிரமணி |
| துணைத்தலைவர்கள் | : கே.ஏ.கணபதி<br>பி.சென்னியப்பன் |
| செயலாளர் | : ஆர். செல்வராஜ் |
| இணைச்செயலாளர்கள் | : எஸ்.ஆர்.இராஜேந்திரன்<br>Dr.கே.ஆர்.பி.சண்முகம் |
| பொருளாளர் | : கே.கே. ரமேஷ் |
| தணிக்கையாளர் | : ஆர். பாலச்சந்திரன் |

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| கே.ராஜாமணி | பி.அருள் |
| வி.பி.செங்கோட்டுவேல் | எம்.எஸ்.சங்மேஸ்வரன் |
| பி.கே.ஈஸ்வரமூர்த்தி | வீ.ஆர்.பாலசுப்பிரமணியன் |
| ஆர். சண்முகவேல் | எம்.அமராபதி |
| எம். கார்த்திக் | எஸ்.அன்பழகன் |
| வி.பி.வீரப்பன் | சி.சர்வராஜன் |
| ஆர்.இளங்கோ | எம்.எஸ்.ராஜேந்திரன் |
| பி.ரவி | கே.என்.தர்மராஜ் |
| Dr.டி.எஸ்.செல்வராஜ் | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| எஸ்.சிவசாமி | உத்தமிபொன்னுசாமி |


## இந்த இதழில்


| | | |
|---|---|---|
| பொருளடக்கம் | - | 1 |
| தலையங்கம் | - | 2 |
| கட்டிட நிதி | - | 3 |
| சங்க செய்தி | – | 4 |
| அடையாள அட்டை விண்ணப்பம் | – | 5 |
| வாழ்த்துகிறோம் | – | 6 |
| நலமுடன் வாழ | – | 7 |
| ஆன்மீகம் | – | 9 |
| சமையல்குறிப்பு | – | 11 |
| சூரிய நமஸ்காரம் | - | 12 |
| பொன்மொழிகள் | - | 13 |
| ஒன்றாய் இருங்கள் | - | 14 |
| காதல்திருமணம் | - | 16 |
| விளையாட்டு விழா | - | 18 |
| கொசுத்தொல்லையா ? | - | 20 |
| அழகுதரும் பொட்டு | - | 21 |
| கவிதை | - | 23 |
| சில நொடிகள் | - | 24 |
| மணமகள் தேவை | - | 25 |
| மணமகன் தேவை | - | 29 |


### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்பு சொந்தங்களுக்கு,



வணக்கம், நமது சங்கம் பலரும் பாராட்டும் வண்ணம் செயல்பட்டு வருகின்றது. நமது சமுதாய மாணவர்களும், இளைஞர்களும், சொந்தங்களும் சங்கம் வழங்குகின்ற வாய்ப்புகளையும், வசதிகளையும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்காக சங்க உறுப்பினர்கள் உறவினர்களிடத்திலும், நண்பர்களிடத்திலும் சங்கம் வழங்குகின்ற சேவைகளை, குறிப்பாக, கொங்கு நாடு இல்லம், (பெண்கள் விடுதி), தீரன் சின்னமலை மாளிகை, வெள்ளிவிழா இல்லம் ஆகியவற்றில் குறைந்த கட்டணத்தில் நல்ல பாதுகாப்போடும், நவீன வசதிகளோடும் உள்ள அறைகள் பற்றித் தெரியப் படுத்த வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் செயற்குழு கூட்டம் நடத்தப்பட்டு, சங்கத்தை மேலும் சீரிய முறையிலும், சிறப்பான வகையிலும் நடத்துவதைப் பற்றி விரிவாக விவாதித்து தீர்மானங்கள் நிறைவேற்றி, செயல்படுத்தப்படுகின்றன. சங்கத்தின் நிதி நிலையை மேம்படுத்துவது அவசியம். சேவையை விரிவு படுத்தவும், பயன்பெறுவோரின் எண்ணிக்கையைப் பெருக்கவும் நிதிநிலைமை நன்றாக இருப்பது மிக முக்கியம் எனவே ஒவ்வொரு உறுப்பினரும் தங்களால் இயன்ற அளவு சங்கத்திற்கு நன்கொடை அளிக்க சங்கத்தின் சார்பாக பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். உறுப்பினர்களின் நிதியுதவியும், ஒத்துழைப்பும் சங்க வளர்ச்சிக்குப் பேருதவியாக இருப்பதோடு, சங்க நிர்வாகிகளுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளித்து மேலும் சிறப்பாகப் பணியாற்ற வைக்கும் என்பது திண்ணம்.

நமது சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஓரளவு வசதி உள்ளவர்களே. சிலர் பெரும் செல்வந்தர்களாக உள்ளனர். நமது சமுதாயத்தில் நலிந்தோருக்கும், உதவி தேவைப்படுவோர்க்கும் சங்கத்தின் மூலமாக சேவை செய்வது நல்வாய்ப்பாக அமையும். அறம் செய்ய ஒரு நல்ல வாய்ப்பு. வருமானத்தில் ஒரு பகுதியை தேவையுள்ள நம் சொந்தங்களுக்கு அளிப்பது மனித நேயச் செயலாகும். எனவே தங்களால் இயன்ற அளவு, குறைந்தது ரூ 1000/– மட்டுமாவது, சங்கத்திற்குக் காசோலையாக அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறேன்.

ஏற்கனவே தெரிவித்தபடி, சங்க 50வது (பொன்விழா) ஆண்டில் அனைத்து சங்க உறுப்பினர்களுக்கும் கிரடிட் கார்டு வடிவில் நவீன அடையாள அட்டை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை விவரங்களை அனுப்பாதவர்கள், தயவுசெய்து செய்தி மடலில் குறிப்பிட்டுள்ள அடையாள அட்டை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து, சங்கத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

செய்தி மடலுக்கு கட்டுரை, கவிதை, வாழ்த்துச் செய்திகள், இரங்கல் செய்திகள், சங்க வளர்ச்சிக்கு ஆலோசனைகள் போன்றவற்றை அனுப்புமாறும் அன்புடன் வேண்டுகிறேன்.

நன்றி.

பரணி கே. பாலசுப்பிரமணி
தலைவர்

❖❖❖❖❖

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டிட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 66,92,284 |
| 1456 | | Dr.N.M.வீரய்யன் (சவீதா பல்கலைவேந்தர்) | 3,00,000 |
| 1457 | | ப.கிருஷ்ணவேணி LH | 1,000 |
| 1458 | | S.கீதாமணி LH | 1,000 |
| 1459 | | கனகவள்ளி LH | 1,000 |
| 1460 | 1846 | M.சித்தையன் LH | 1,000 |
| 1461 | 1430 | P.தனபால் | 1,000 |
| 1462 | | K.சசிகலா LH | 1,000 |
| 1463 | | R.அருண்சரவணன் GH | 1,000 |
| 1464 | 1578 | V.விஸ்வநாதன் | 1,000 |
| 1465 | | N.பிரம்மதேவன் GH | 1,000 |
| 1466 | | சங்கீதா LH | 1,000 |
| 1467 | 2638 | S.கந்தசாமி | 1,000 |
| 1468 | | K.P.N.ராஜேஷ் | 1,000 |
| 1469 | | A.P.ராஜீ | 1,000 |
| 1470 | | R.தர்மன் | 1,000 |
| 1471 | | K.ஆனந்த் | 1,000 |
| | | மொத்தம் | 70,07,284 |

## உறுப்பினர்களுக்கு அன்பான வேண்டுகோள்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் புதியதாக அடையாள அட்டை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் அனைவரும் தேவையான தகவல்களைச் செய்தி மடலில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி அடையாள அட்டை விண்ணப்பத்தில் பூர்த்தி செய்து அனுப்பும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

உறுப்பினர்கள் விரைந்து செயல்பட்டு தகவல்களை அனுப்பிட அன்புடன் வேண்டுகிறோம்.

பரணி **கே. பாலசுப்பிரமணி**
தலைவர்

**ஆர். செல்வராஜ்**
செயலாளர்

❖❖❖❖❖

## சங்கச் செய்தி

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் இணையதள முகவரி மாற்றப்பட்டுள்ளது.

www.kongunanbargalsangam.com

உறுப்பினர்கள் இனிமேல் புதிய இணையதளத்தைப் பயன்படுத்தி சங்கச் செய்திகளை அறிந்துகொள்ள வேண்டுமென அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பரணி **கே. பாலசுப்பிரமணி**
தலைவர்

**ஆர். செல்வராஜ்**
செயலாளர்

❖❖❖❖❖

அடையாள அட்டை விண்ணப்பம்

# கொங்கு நண்பர்கள் சங்கம்

**வெள்ளி விழா இல்லம்**
நெ.34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.

Membership No. / உறுப்பினர் எண் :
Name / பெயர் :
Father's Name / தகப்பனார் பெயர் :
Date of Birth / பிறந்த தேதி :
Edu. Qualification / கல்வித்தகுதி :
Occupation / தொழில் :
Koottam & Kula Deivam
கூட்டம் & குல தெய்வம் :

Photo

| Native Address<br>சொந்த ஊர் முகவரி | Present Address<br>தற்போதைய முகவரி | Office Address<br>அலுவலக முகவரி |
|---|---|---|
| Ph : | Ph : | Ph : |

Cell Number: E-mail ID :

Family Details / குடும்ப விவரம்

| Name<br>உறுப்பினர் பெயர் | Date of Birth<br>பிறந்த தேதி | Relationship<br>உறவுமுறை | Education / Employment<br>படிப்பு / தொழில் | Blood Group<br>இரத்தப் பிரிவு | Land Line / Mobile<br>தொலைபேசி/கைபேசி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

குறிப்பு : தங்களைப் பற்றி மேலும் விபரங்களைத் தெரிவிக்க விரும்பினால் அவற்றை இத்துடன் இணைத்து அனுப்பவும்.

Signature
கையொப்பம்

# வாழ்த்துகிறோம்



N.S.I.T மற்றும் M.G.M குழும நிறுவனங்களின் தலைவரும், கொங்குநாடு அறக்கட்டளை அறங்காவலரும், பெருந்துறை KVIT அறக்கட்டளையின் தலைவரும், சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயல்பாடுகளுக்கு பல ஆண்டுகளாக உறுதுணையாக இருந்து வருபவருமான திரு. எம். முருகேசன் அவர்களுக்கு கொழும்பு பன்னாட்டு திறந்தவெளிப் பல்கலைக்கழகம் (The open International university) (Honoris Causa) Doctor of Philosophy பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது.

**27.11.2011** அன்று கொழும்பு பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற **49** ஆவது பட்டமளிப்பு விழாவில் திரு. எம். முருகேசன் அவர்களுக்கு போக்குவரத்துத் துறை, சமூக சேவை, கல்விப் பணி ஆகியவற்றில் அவர் ஆற்றிய சிறப்புமிக்க சேவைகளைப் பாராட்டியும், அரிய சாதனைகளுக்காவும் இந்த டாக்டர் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.


தன்னுடைய ஒப்பற்ற சாதனைகளுக்காகவும், சேவைகளுக்காகவும் SAMRAT AWARD, நமது சங்கத்தின் கொங்கு மாமணி விருது உட்பட எண்ணற்ற விருதுகளைப் பெற்றுள்ள திரு. எம். முருகேசன் அவர்களின் சாதனை மகுடத்தில் ஒரு வைரக்கல்லாக இந்த டாக்டர் பட்டம் அமைந்துள்ளது. என்றால் அது மிகையல்ல.

எளிமை, ஒய்வறியா உழைப்பு, மனித நேயம், சமுதாயப் பற்று, வியத்தகு சாதனைகள் பல புரிந்தும் எப்போதும் அடக்கம், அனைவரிடத்திலும் அன்புடனும் பாசத்துடனும் பழகும் பாங்கு போன்ற அருங்குனங்களைக் கொண்டு, தம்முடைய வாழ்நாள் சாதனைகளுக்காகக் கொழும்பு பன்னாட்டு பல்பலைக் கழகத்தின் டாக்டர் பட்டம் Ph.D. பெற்றுள்ள Dr.எம். முருகேசன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறது.

❖❖❖❖❖❖

# என்றும் நலமுடன் வாழ

கொங்குமாமணி Dr.வி.எஸ். நடராஜன்
முதியோர் மருத்துவர்



### முதியோர் மருத்துவத்தின் சிறப்பு

முதியோர்களின் எண்ணிக்கை அதிகம் ஆக ஆக அவர்களின் பிரச்சனைகளும் அதிகரித்துக் கொண்டே போகின்றன. அவர்களுடைய மருத்துவ பிரச்சனைகளில் உதவுவதற்கு முதியோர் மருத்துவம் தேவைப்டுகிறது. இத்துறை நம் நாட்டிற்குப் புதியது. இத்துறையைப் பற்றிய அவசியத்தை சற்றுத் தெரிந்துகொள்வோம்.

### தொல்லைகளை அறிவதில் சிரமம்

சுமார் 70 வயது முதியவர் உறவினரின் துணையோடு ஒரு டாக்டரிடம் ஆலோசனை பெறச் செல்லுகிறார். வீட்டிலிருந்து புறப்படும் பொழுது தனக்குண்டான எல்லாத் தொல்லைகளையும் டாக்டரிடம் சொல்லி அதற்குத்தக்க சிகிச்சைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே அவருடைய எண்ணம். ஆனால், டாக்டரைப் பார்த்த உடனேயே ஒருவித மனப்பதற்றத்தால் தான் சொல்ல வேண்டிய தொல்லைகளைப் பற்றி மறந்து விட்டு தேவையற்ற தொல்லைகளைச் (complaints) சொல்லிவிடுகிறார். இது மட்டுமின்றி மறதி மற்றும் காது கேளாமையால் தன் தொல்லைகளை மருத்துவரிடம் முழுமையாகச் சொல்ல முடியாத நிலை ஏற்படுகிறது.

### மாறுபட்டுக் காணப்படும் நோயின் அறிகுறிகள்

தொல்லைகளைக் கேட்டறிந்து, முதியவரின் உடல் பரிசோதனை செய்யப்படுகிறது. முதுமையில் நோயின் அறிகுறிகள் மாறுபட்டு காணப்படும். (உ.ம்) மார்பு வலியின்றி மாரடைப்பு நோய் வரலாம். வயிற்றுவலி இல்லாமலேயே பித்தப்பையில் கல் அடைப்பு ஏற்படலாம். அதிக இருமல், சளி இல்லாமலேயே காசநோய் மறைந்து தாக்கும். இப்படி மாறுபட்டுக் காணப்படும் நோய்களைச் சரியாகக் கண்டறிவது இத்துறையில் பயிற்சி பெற்ற மருத்துவரால்தான் முடியும்.

சில நேரங்களில் முதுமையின் விளைவிற்கும், அக்காலத்தில் தோன்றும் நோய்களுக்கும் அதிக வித்தியாசம் இருக்காது. (உ.ம்) முதுமையில் தைராய்டு சுரப்பி குறைவாக சுரந்தால் உடல் சற்றுப் பருக்கும். தோல் கடினமாயும் வறட்சியாகவும் மாறிவிடும். மந்தநிலை உருவாகும். சுறுசுறுப்பு குறையும். மலச்சிக்கலும் ஏற்படும். இவை அனைத்தும் வயதான காலத்தில் வரக்கூடிய தொல்லைகளைப் போன்றே இருக்கும். ஆகையால் இத்தொல்லைகள் முதுமையினால் அல்ல, தைராய்டு குறைவாக சுரப்பதினால் ஏற்பட்டதே என்று அனுபவமிக்க ஒரு முதியோர் மருத்துவரால் மட்டுமே கண்டறிய முடியும்.

### முதுமையும் பலவித நோய்களும்

முதியவர் அதிகம் தொல்லைகள் ஏதும் கூறாவிட்டாலும் ஒரு முதியோர்

மருத்துவர் அவரை முழுமையாக பரிசோதனை செய்வார். அதன் மூலம் தெரிந்தும் தெரியாமலும் இருக்கும் பலவித நோய்களைக் (Multiple disease) கண்டறிய முடியும்.

**பரிசோதனைகளும் மாற்றங்களும்**

நோய்களை முழுமையாகக் கண்டறிய ஒரு சில பரிசோதனைகள் அவசியம். (உ.ம்) எக்ஸ்ரே, இரத்தம் மற்றும் பரிசோதனை. இப்பரிசோதனைகளை உடனே செய்து வா என்று ஒரு துண்டுச்சீட்டில் மிகச் சுலபமாக எழுதிக் கொடுத்துவிடலாம். ஆனால் அதைச் செயல்படுத்துவது மிகவும் சிரமம். சளி அதிகம் இல்லாமல் இருக்கும் ஒரு நோயாளி, சளிக்கு பதிலாக எச்சிலைக் கொடுத்துவிடுவார். படுத்த படுக்கையாகக் கிடக்கும் ஒரு முதியவரின் சிறுநீரை எப்படி சுத்தமாக எடுத்து பரிசோதனைக் கூடத்திற்கு அனுப்ப முடியும்? இது மட்டுமல்ல, வயது ஆக ஆக பரிசோதனைகளில் சர்க்கரையின் அளவு, உப்புச்சத்து போன்றவை எவ்வித நோயுமின்றியே சற்று அதிகமாகக் காணப்படும். ஆகையால் எந்தப் பரிசோதனையை எப்போழுது, எப்படிச் செய்ய வேண்டும் என்பது முதியோர் மருத்துவருக்குத்தான் தெரியும்.

**சிகிச்சை ஒரு சிக்கல்**

முதியவர்களுக்கு நோய் என்னவென்று கண்டுபிடிக்கப்பட்ட பின்பு அடுத்த பிரச்சனை அவருக்குத் தக்க சிகிச்சை அளிப்பது. ஏனென்றால், பலவித நோய்களுக்கு பலவித மருந்துகள்; சில சமயங்களில் மருந்துகளின் தீய விளைவுகள் நோய்களைவிடக் கொடியதாக இருக்கும். மேலும் சில நோய்களுக்கு மருந்தின்றியே தக்க சிகிச்சை அளிக்க முடியும். (உ.ம்) ஆரம்ப நிலையில் உள்ள நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், மூட்டுவலி. ஆகையால் முதியவருக்கு தக்க சிகிச்சை அளிப்பதற்கு ஆழ்ந்த அறிவும், அனுபவமும் உள்ள முதியோர் மருத்துவரால்தான் முடியும்.

**குடும்பப்பிரச்சனை – தனிக் கவனம் தேவை**

மருத்துவப் பிரச்சனையைத் தவிர குடும்பம், நிதி சார்ந்த பிரச்சனைகளும் முதியோரை அதிகம் தாக்கும். முதியவர் யாருடன் எப்படி வசித்து வருகிறார்? கூட்டுக் குடும்பமா? அல்லது தனியாகவா? நிதி வசதி எப்படி? சொந்த வருமானமா அல்லது மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலையா! வீட்டில் அவருக்கு எப்படி மதிப்பு, மரியாதை? இவற்றையெல்லாம் பொறுத்துதான் ஒரு முதியவருடைய மனநலமும் உடல் நலமும் அமைகிறது. (உ.ம்) தனிமையில் நிதிவசதி குறைவோடு மனச்சோர்வுவுள்ள ஒரு முதியவருக்கு மனச்சோர்விற்குண்டான மாத்திரை மட்டும் அவர் சோர்வை நீக்கி விடாது. அவருக்குள்ள மற்றப் பிரச்சனைகளையும் தெரிந்து அதற்குத் தக்க உதவி செய்வதால் மட்டுமே அவர் முழுமையாக குணம் அடைவார்.

ஆகையால் முதுமைக் காலத்தில் தோன்றும் உடல் நலம், மனநலம் மற்றும் குடும்பம் சார்ந்த தொல்லைகளை முழுமையாக ஆராய்ந்து அதற்குத் தக்கவாறு சிகிச்சை அளிப்பது யாரால் முடியும்?

இக்கேள்விக்கான பதிலை உங்களிடமே விட்டு விடுகிறேன்.!

❖❖❖❖❖

தொடரும்...

# ஆன்மீகம்

## சபரிமலை நாயகன்!

சபரிமலையில் கோவில் கொண்டிருக்கும் தர்மசாஸ்தாவுக்கு, கார்த்திகையில் திருவிழா துவங்குகிறது. பக்தர்கள் அன்று முதல் ஐம்புலனையும் அடக்கி, 41 நாட்கள் முதல் 60 நாட்கள் வரை விரதம் இருப்பர். விரதம் என்ற சொல்லை, "வி+ரதம்" எனப் பிரிக்கலாம். வி என்றால் "மேலான!". ஆங்கிலத்தில் கூட, வி என்ற அடையாளத்தை, விக்டரி என்ற பொருளில், வெற்றியின் சின்னமாக எடுத்துக் கொள்கின்றனர். "ரதம்' என்றால், "தேர்!". வாழ்க்கைத் தேர் வெற்றிகரமாக ஓட உதவுவது விரதம். விரதம் என்றால், வெறும் உணவு கட்டுப்பாடு மட்டுமில்லை. கண், காது, மூக்கு, நாக்கு, உடல் எனும் ஐம்புலன்களும் கட்டறுந்து ஓடுகின்ற. இஷ்டப்பட்டதை எல்லாம் இவை பார்க்கின்றன, கேட்கின்றன, நுகர்கின்றன, பேசுகின்றன, அனுபவிக்கின்றன. இந்தப் புலன்களைக் கட்டுபடுத்தினால், வாழ்க்கைத் தேர் சரியான பாதையில் செல்லும். இதற்குப் பெரிதும் உதவுவது ஐயப்ப விரதம்.

ஐயப்பன் எனும் சொல், "ஐயன் என்ற சொல்லில் இருந்து வந்தது. "ஐயன்" என்றால், உயர்ந்தவன், பெரியவன்' என்றெல்லாம் பொருள் உண்டு. இப்போதும், கிராமங்களில் உள்ளவர்கள் சாஸ்தா கோவிலுக்குச் செல்கிறவர்களை, ஐயன் கோவிலுக்கு கிளம்பியாச்சா? என்று கேட்பது வழக்கம். ஐயப்பன் தெய்வம் உயர்ந்ததாகக் கருதப்படுவதற்கு காரணம் உண்டு.

தனக்கென வாழாமல், பிறர்க்கென வாழ்பவனே உயர்ந்தவன். அவ்வகையில், 12 வயதிலேயே தன் தாயின் தலைவலியைப் போக்க, தன் உயிரையே பணயம் வைத்து காட்டிற்குச் சென்று, புலியையே ஒட்டி வந்தவர் ஐயப்பன். இவ்வளவு பெரிய தியாக உணர்வுள்ளவர் என்பால்தான் , அவர், "ஐயப்பன்" என்ற பெயர் பெற்றார்.

அவரை, 'தர்மசாஸ்தா' என்றும் சொல்வர். அவர் தர்மத்தை உலகில் நிலைநிறுத்த அவதரித்தவர். மகிஷி எனும் அரக்கியால் உலகம் பல அவலங்களை அனுபவித்த போது, அவளை அழித்து, தர்மத்தை நிலைநிறுத்தினார். இதனால், 'தர்ம' என்ற அடைமொழி, "சாஸ்தா" என்ற பெயரோடு இணைந்தது. "சாஸ்தா" எனும் சொல்லுக்கு, "கூட்டமாக வந்து வழிபடப்படும் கடவுள்....,' என்று பொருள்.

இப்போதும், சாஸ்தா கோவில்கள் அடர்ந்த காட்டுப் பகுதி, ஊரை விட்டு ஒதுக்குப்புறமான சோலைகள் நிறைந்த பகுதிகளுக்குள் இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த இடங்களில் மிருகங்கள் நிறைந்திருந்தன. இங்கே தனியே செல்வது ஆபத்து என்பதால், பக்தர்கள் ஒலி எழுப்பியபடியே சாஸ்தாவை வழிபடச் சென்றனர். இந்த ஒலி கேட்டு, மிருகங்கள் ஒதுங்கி ஒடி விடும். இன்றைக்கு, ஐயப்பன் கோவிலுக்கு செல்ல எவ்வித பயமும் இல்லை என்றாலும், பழைய நடைமுறைப்படி சரண கோஷம் எழும்பியபடியும் , “சுவாதி திந்தக்கதோம், ஐயப்ப திந்தக்கதோம்...’ என்றும், வாத்தியங்களை முழங்கியபடியும் செல்கின்றனர்.

சபரிமலை கோவில் பரசுராமரால் உருவாக்கப்பட்டது. சாஸ்தா, தேசத்தைக் பாதுகாக்கும் தெய்வம், எனவே, 12 சாஸ்தா கோவில்களை அவர் பிரிதிஷ்டை செய்துள்ளார். அவற்றில் அச்சன்கோவில், குளத்துப்புழை, ஆரியங்காவு, சாஸ்தாம்கோட்டை ஆகியவை புகழ் மிக்கவை. குளத்துப்புழையில், ஐயப்பன் பாலகனாக இருந்த போது வாழ்வைக் கழித்தார். ஆரியங்காவில் இளைஞனாகவும், அச்சன் கோவிலில் தம்பதி சமேதராகவும், சபரிமலையில் யோக நிலையிலும் (துறவு) காட்சியளிக்கிறார். சபரிமலைக்குச் செல்லும் பக்தர்கள், குருவின் மூலம் மாலை அணிந்து கொள்கின்றனர். குருமார்கள் எக்காரணம் கொண்டு பணத்தின் மீது நாட்டம் கொண்டிருக்கக் கூடாது. இல்லறத்தில் இருந்தாலும், தாமரை இலை தண்ணீர் போல வாழ வேண்டும். ஒருவரது வசதி, பணம் ஆகியவை குருசாமியாவதற்கு தகுதியைத்தராது. அவரது சபரி மலை பயண அனுபவம், 18 ஆண்டுகளுக்கு 41 நாள் தொடர் விரதம் இருந்து பெருவழிப்பாதை மூலம் சென்று திரும்புதல், அதன் மூலம் அவர் பெற்ற தெய்வசக்தி, வழிபாட்டிலும், பக்தர்களை வழி நடத்துவதிலும் அவருக்குரிய திறமை ஆகியவற்றைப் பொறுத்தே குருசாமியாகும் தகுதியைப் பெறுகிறார்.

குருசாமியின் உதவியோடு ஐயப்பன் கோவிலுக்குச் சென்று வரலாம். குருசாமி கிடைக்காத பட்சத்தில், உள்ளூர் கோவிலில் உள்ள தெய்வத்தையே குருவாகக் கருதி, மாலையணிந்து கொள்ளலாம்.

நன்றி : வேர்ட்பிரஸ்.காம்.

❖❖❖❖❖

# சமையல் குறிப்பு

## ஓட்ஸ் பெப்பர் (மிளகு) கோழிக்கறி மசாலா

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| கோழிக்கறி | – 1/2 கிலோ |
| ஓட்ஸ் | – 100 கிராம் |
| மிளகுத்தூள் | – 1 டீஸ்பூன் |
| வெங்காயம் | – 1 நறுக்கியது |
| தக்காளி | – 1 நறுக்கியது |
| இஞ்சி, பூண்டு விழுது | –1 1/2 டீஸ்பூன் |
| கறிவேப்பிலை | – சிறிதளவு |
| கொத்தமல்லி இலை | – சிறிதளவு |
| மஞ்சள்தூள் | – 1 சிட்டிகை |
| உப்பு, எண்ணெய் | – தேவைக்கேற்ப |

### செய்முறை

கடாயில் எண்ணையை ஊற்றிக் காய்ந்ததும், வெங்காயத்தைச் சேர்த்து பொன்நிறமாக வறுக்கவும், அதனுடன் இஞ்சி பூண்டு விழுதைச் சேர்க்கவும்.

கறிவேப்பிலை, தக்காளி, மஞ்கள்தூள்,மிளகுத்தூள் மற்றும் போதுமான உப்பு சேர்க்கவும்.

காரம் அதிகம் விரும்புபவர்கள் சிறிது கூடுதலாக மிளகுத்தூள் சேர்க்கலாம்.

தக்காளி வெந்ததும் மசித்துவிட்டு, சிக்கனைச் சேர்க்கவும்.

சிக்கன் வேகுமளவு சிறிதளவு மட்டும் நீர் விடவும், ஓட்சை லேசாக மிக்சியில் ஒரு சுற்று சுற்றி சிக்கன் வெந்ததும் சேர்க்கவும்.

மசாலாவுடன் சிக்கனும் ஓட்சும் வெந்ததும் சிறிது கிரேவியாக இருக்கும் பொழுது சிக்கனை இறக்கி வைத்து கொத்தமல்லி இலை தூவி அலங்கரிக்கவும். சூடாகப் பரிமாறவும்.

நன்றி : வேர்ட்பிரஸ்.காம்.

❖❖❖❖❖

# புது சக்தி தரும் சூரிய நமஸ்காரம்

பூமியில் உள்ள எல்லா சக்திகளுக்குமே மூலக் காரணம் சூரியன்தான். அந்தச் சூரிய ஒளி மட்டும் பூமிக்குக் கிடைக்காவிட்டால் எந்த உயிரினமும் பூமியில் வாழ முடியாது.

இதனால்தான் சூரிய நமஸ்காரம் என்கிற யோகக்கலையையும் நம் முன்னோர்கள் ஏற்படுத்தி வைத்துள்ளனர். எப்படி சூரியன் வழியாக நம் பூமிக்கு சக்திகள் கிடைக்கின்றனவோ, அதுபோல் சூரிய நமஸ்காரம் தினமும் செய்வதன் மூலமும் நம் உடலுக்குத் தேவையான பல்வேறு சக்திகள் கிடைக்கின்றன.

சூரிய நமஸ்காரத்தில் உடல் அசைவுகளும், மூச்சு ஓட்டமும் இணக்கமாக நடைபெறுகின்றன. நுரையீரல்களில் காற்றோட்டம் தாராளமாகிறது. ஏராளமான கரியமில வாயுவும், பிற நச்சுப் பொருட்களும் மூச்சு மண்டலத்திலிருந்து வெளியேற்றப்படுகின்றன. ஜீரண மண்டலத்திற்குக் கூடுதல் சக்தி கிடைக்கிறது. கல்லீரல், வயிறு, மண்ணீரல், குடல்கள் எல்லாம் நன்றாக மசாஜ் செய்யப்படுகின்றன. இதனால் மலச்சிக்கல் பிரச்சினைக்கு இடமில்லாமல் போகிறது. மேலும், வயிற்று உறுப்புக்களில் ரத்தம் தங்குவதில்லை என்பதால் உடல் உறுதியாகிறது.

இவற்றோடு, சிறப்புப் பலனாக நம் நினைவாற்றல் அதிகரிக்கிறது. அதாவது, தொடர்ந்து சூரிய நமஸ்காரம் செய்து வந்தால் ரத்தக் கொதிப்பு கட்டுப்படுத்தப்படுகிறது. இதயத் துடிப்பும் சீராகிறது. சிம்பதட்டிக், பாராசிம்பதட்டிக் நரம்புகளின் செயல்களை நெறிப்படுத்துவதன் மூலம் நல்ல ஓய்வுக்கும் உறக்கத்திற்கும் இது உதவுகின்றது. இதனால் நினைவாற்றல் அதிகரிக்கின்றது.

உடல் பொலிவுக்கும் சூரிய நமஸ்காரம் பயன்படுகிறது. சூரிய நமஸ்காரத்தை முறைப்படி செய்யும் போது உடலில் இருந்து வியர்வைத் துளிகள் வெளியேறும் . அதன் மூலம் உடலில் உள்ள ஏராளமான நச்சுப்பொருட்கள் தோலின் வழியே வெளியேறுகின்றன. எந்த அளவுக்கு வியர்வை வெளிவருகிறதோ அந்த அளவுக்கு நற்பலன்கள் ஏற்படும்.

மேலும், சூரிய நமஸ்காரத்தில் நம் கழுத்தானது முன் பின் வளைக்கப்படுகின்றது. இதனால் தைராயிடு, பாராதைராயிடு சுரப்பிகளுக்கு ரத்தம் சீராகக் கிடைக்கின்றது. இவை சிறப்பாகச் செயல்படுவதனால் எல்லா எண்டோக்கிரைன் சுரப்பிகளும் தமக்குரிய இயல்பான பணிகளைச் செய்கின்றன. இதன் மூலம் தோலானது புத்துணர்வு பெற்றுப் பொலிவு பெறுகின்றது.

சூரிய நமஸ்காரம் செய்ய உகந்த நேரம் காலைதான். அது முடியாதவர்கள் மாலையிலும் செய்யலாம். சாப்பிட்ட பின் குறைந்தது இரண்டு மணி நேரம் கழித்து தான் இதைச் செய்ய வேண்டும் .

நன்றி : வேர்ட்பிரஸ்.காம்.

❖❖❖❖❖

# பொன்மொழிகள்

1. அதிகம் பேசாதவனை உலகம் விரும்புகிறது. அளந்து பேசுபவனை அதிகம் மதிக்கிறது. அதிகம் செயல்படுபவனையே கைகூப்பித் தொழுகிறது.
2. கற்ற அறிவையும், பெற்ற செல்வத்தையும் இறுதிக் காலம் வரை மற்றவர்களுக்காகச் செலவிடுங்கள்.
3. நம்முடன் வாழ்வோரைப் புரிந்து கொள்வதற்கு நம்மை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.
4. நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான்.
5. சலித்துக் கொள்பவன் ஒவ்வொரு வாய்ப்பிலும் உள்ள ஆபத்தைப் பார்க்கிறான். சாதிப்பவன் ஒவ்வொரு ஆபத்திலும் உள்ள வாய்ப்பினைப் பார்க்கிறான்.
6. மகிழ்ச்சி என்ற உணர்ச்சி மட்டும் இல்லாவிட்டால் வாழ்க்கை என்பது சுமக்க முடியாத பெரிய சுமையாகியிருக்கும்.
7. உலகம் ஒரு விசித்திரமான கல்லூரி. இங்கே பாடம் சொல்லிக்கொடுத்துத் தேர்வு வைப்பது இல்லை. தேர்வு வைத்த பிறகே பாடம் கற்பிக்கப்படுகிறது.
8. சிக்கனம் என்பது ஒருவன் பணத்தை எவ்வளவு குறைவாகச் செலவு செய்கிறான் என்பதைப் பொறுத்தது அல்ல. அதை அவன் எவ்வளவு உபயோகமாகச் செலவிடுகிறான் என்பதைப் பொறுத்தது ஆகும்.
9. எதை இழந்தீர்கள் என்பதல்ல முக்கியம், என்ன மிச்சம் இருக்கிறது என்பதே முக்கியம்.
10. அரிய சாதனைகள் அனைத்தும் வலிமையினால் செய்யப்பட்டவை அல்ல; விடாமுயற்சியினால் தான்.
11. முன்நோக்கி செல்லும் போது கனிவாயிரு. ஒருவேளை பின்நோக்கி வரநேரிட்டால் யாராவது உதவுவார்கள்.
12. ரகசியத்தை வெளிப்படுத்தியவனுக்கும், துக்கத்தை வெளிப்படுத்தாவனுக்கும் மனதில் நிம்மதி இருக்காது.
13. எல்லோரையும் நம்புவது அபாயகரமானது. ஒருவரையும் நம்பாமல் இருப்பது இன்னும் அபாயகரமானது.
14. எல்லாத் துன்பங்களுக்கும் இரண்டு மருந்துகள் உள்ளன. ஒன்று காலம், இன்னொன்று மௌனம்.
15. எல்லோரும் தம்மை விட்டு விட்டு வேறு யாரையோ சீர்திருத்த முயலுகிறார்கள்.
16. ஆசையில்லாத முயற்சியால் பயனில்லை. முயற்சியில்லாத ஆசையால் பயனில்லை.
17. செயல் புரியாத மனிதனுக்கு தெய்வம் ஒருபோதும் உதவி செய்யாது.
18. சண்டைக்குப் பின் வரும் சமாதானத்தைவிட, என்றும் சண்டையே இல்லாத சமாதானம் தான் வேண்டும்.
19. நேற்றைய பொழுதும் நிஜமில்லை; நாளைய பொழுதும் நிச்சயமில்லை; இன்றைக்கு மட்டுமே நம் கையில்.
20. மகிழ்ச்சியாய் நீ வீணாக்கிய தருணங்களெல்லாம் வீணானவையல்ல;
21. பழமையைப் பற்றி ஒன்றுமே தெரியாமல் புதுமையைச் சிறப்பாகப் படைக்க முடியாது.
22. வாசிப்புப் பழக்கம் என்பது அருமையான ருசி, அழகான பசி, ஒரு முறை சுவைக்கப் பழகிவிட்டால் அது தொடர்ந்து வரும்.
23. நீங்கள் விரும்புவது ஒருவேளை உங்களுக்குக் கிடைக்காமல் போகலாம். ஆனால் உங்களுக்குத் தகுதியானது உங்களுக்குக் கண்டிப்பாகக் கிடைத்தே தீரும்.
24. அறிவு ஒன்றுதான் அச்சத்தை முறிக்கும் அரிய மருந்து. அறிவை வளர்த்துக் கொண்டால் எல்லாவிதமான பயங்களும் அகன்றுவிடும்.
25. தவறு நேர்ந்து விடுமோ என்று அஞ்சி அஞ்சி எந்தச் செயலையும் செய்யாமல் பின் வாங்குவது இழிவானது.

# ஒன்றாய் இருங்கள் உயர்வினை எண்ணுங்கள்

தர்ஷினி சதாசிவன் – எட்டாம் வகுப்பு

**முன்னுரை:**

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – நம்மில்
ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு'

என்று பாரதியார் கூறினார்.

மனிதன் குடும்பம், சுற்றம், ஊர், சமுதாயம், உலகம் என்று பலவாறு பிணைக்கப்பட்டு வாழ வேண்டியவன். ஒற்றுமையின் இன்றியமையாமையினை ஒவ்வொருவரும் உணரவேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பள்ளியில் ஒற்றுமை**

ஒற்றுமையின் மேன்மையை உணரவே மாணவர் பருவத்திலேயே பள்ளிகளில் தேசிய இளைஞர் படை, சாரணர் இயக்கம், மாணவர் முகாம் போன்றவை தோற்றுவிக்கப்பட்டன. இவற்றின் மூலம் மாணவர் சமுதாயம் நாட்டுப் பற்றுடன் எழுச்சி பெற்று தேசத்தை ஒன்றிணைத்து உயர்த்த முடியும்.

**குடும்பத்தில் ஒற்றுமை**

குடும்பம் என்பது ஒரு மனிதனது பெற்றோர், பெற்ற பிள்ளைகள் மற்றும் வாழ்க்கைத்துணை இணைந்ததாகும். இவர்களுக்கிடையே எவ்வித பிணக்கும் இல்லாது இருந்தால்தான் வாழ்க்கை தெளிந்த நீரோடை போல இருக்கும். குடும்பத்தினர் ஒன்றுபட்டால் குடும்பம் உயர்வு பெறும். உயர்ந்த குடும்பத்தில்தான் சிறந்த பிள்ளைகள் தோன்றுவார்கள். ஒற்றுமை என்பது குடும்பத்திலிருந்தே தொடங்க வேண்டும்.

**தொழிலில் ஒற்றுமை**

தம் கடமைகளை பூர்த்தி செய்வதற்காக ஒவ்வொருவரும் ஒரு தொழிலில் ஈடுபட வேண்டியுள்ளது. பலர் கூடி பல்வேறு நிலைகளில் ஈடுபடும் தொழில் துறையில் ஒன்று கூடிச் செயல்பட்டால்தான் தொழிலில் உயர்வு பெறமுடியும். தொழிற்சங்கங்கள் என்ற கூட்டு முயற்சியால் பல வெற்றிகளைப் பெறமுடியும்.

**கூட்டுறவு – சமுதாய ஒற்றுமை**

'கூட்டுறவே நாட்டுயர்வு'

'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை'

மொழி, மதம், கலை, கலாச்சாரம் இவற்றால் வேறுபட்டாலும் நாம் அனைவரும் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு சகோதரத்துவத்துடன் வாழ்ந்தால் நாடு உயரும். நாமும் உயர்வோம்.

**உலக அமைதி**

'ஐக்கிய நாடுகள் அவை' என்ற அமைப்பின் மூலம் உலக நாடுகள் அனைத்திலும் போர் என்ற ஒன்றே இல்லாமல் செய்து போருக்காக ஆகும் பலகோடி ரூபாய் செலவுகளை உலகத்தின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தியும், போர் வீரர்களை ஆக்கப் பணிகளில் ஈடுபடுத்தியும் உலகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றி அமைக்க வேண்டும்

ஒற்றுமை தந்த பரிசே நம் நாட்டின் சுதந்திரம். ஒற்றுமையுணர்வை வலியுறுத்த நம் முன்னோர்கள் பல கதைகளையும் பொன்மொழிகளையும் நமக்காக அளித்துள்ளனர். அவற்றை நாம் என்றும் நினைவில் கொண்டு இருக்கவேண்டும்.

**முடிவுரை**

எவர் ஒருவராலும் தனித்து வாழ முடியாது. நேரிடையாகவோ, மறை முகமாகவோ ஒருவர் மற்றொருவரைச் சார்ந்துதான் வாழ்ந்தாக வேண்டும். இதனைத் தெளிவாக உணர்ந்து ஒற்றுமையுடன் வாழ்ந்து மேன்மை அடைவோமாக!

❖❖❖❖❖

## இணைச்சீர்

திருமண வீட்டில் நடைபெறும் மிக முக்கியமான சடங்குகளில் இணைச்சீர் ஒன்றாகும். இதனை "இணை உடுத்துதல்" என்றும் கூறுவர். திருமண நிகழ்ச்சிக்கு இணையான சீர் என்றும் இச்சடங்கைக் கூறுவர்.

பெண்ணுக்கு உரிமை இல்லாத அந்தக் காலத்திலேயே கொங்கு வேளாளர்கள் பெண்ணிற்குச் சம உரிமை கொடுத்தனர் என்றும், சொத்து, பொருள் ஆகியவற்றில் ஆணுக்கு இணையாகப் பெண்ணிற்கும் உரிமை உண்டு என்பதை உணர்த்தும் சடங்கு –சட்ட விதி இணைச்சீர் என்பர். பிற பெண்ணை மணந்து கொள்ளப்போகும் மணமகன் தன் உடன் பிறந்தவர்களுக்கும் தனது சீர்வரிசையில் சம பங்கு உரிமை அளிக்கிறேன். அதனை மறுக்கவும், துறக்கவும் மாட்டேன் என்பதற்கான உறுதிப்பத்திரம் இச்சடங்கு என்பர்.

மணக்கோலம் தாங்கிப் பந்தலில் அமைக்கப்பட்ட மணவறையில் மணமகன் வந்து அமர்வான். உடன் பிறந்தவளுக்குப் பட்டாடை உடுத்தி மணமகள் போல் நன்கு அலங்கரித்து மலர் மாலை அணிந்து அழைத்து வருவர். திருமணப் பேழைக் கூடையை அவள் தலையில் சுமந்து வருவாள். அதில் கூறைப்புடவை, வெற்றிலை பாக்கு, மஞ்சள்,தேங்காய், பழம், பூ, கண்ணாடி, சீப்பு ஆகியன இருக்கும். இடக்கை பேழையைப் பிடித்து வர, வலக்கையில் நிறைசீர்ச் செம்பு தாங்கி மணமகனைச் சுற்றி வருவாள். வலப்புறம் பின்புறம் நிறுத்திப் பேழையில் உள்ளவைகளை நீக்கி அதில் நிற்க வைப்பார்கள். கூறைப்புடவை முந்தானையில் பொன்/பணம் முடிவாள். பரிசத்திற்கும் பணம் அளிக்கறேன் என்பதன் அடையாளமாகும். மங்கலன் மங்கல வாழ்த்துக் கூறுவான். இதனைத் திருமணத்திற்கு இணையான சீர் என்றும் கொள்ளலாம். சகோதரிகள் இணைப்பணம் அளிப்பர்.

❖❖❖❖❖

# காதல் திருமணம்

இளைஞர்களே! நீங்கள்தான் இந்த நாட்டின் எதிர்காலம். இந்த நாட்டை நல்ல நிலைமைக்கு வழி நடத்திச் செல்லும் பொறுப்பு உங்களுக்கு நிறையவுள்ளது. உங்கள் குடும்பத்திற்குச் செய்யும் கடமையைப் போல் உங்கள் நாட்டிற்கும் நீங்கள் கடமையைச் செய்யவேண்டும்.

'நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே! நீ உன் நாட்டிற்கு என்ன செய்தாய் என்று உன்னையே கேட்டுப்பார்!' என்று அமெரிக்க ஜனாதிபதி கென்னடி கூறியதை எண்ணிப் பாருங்கள். கல்லூரிகளில் படிக்கும் நாட்களிலேயே காதலில் ஈடுபடுகிறீர்கள்.

காதல் உலகத்திலேயே மிக சக்தி வாய்ந்தது. அது உங்களை மற்ற கடமைகளிலிருந்து திசை மாற்றிவிடும். அதைப் படிப்பு முடிந்த பிறகு வைத்துக்கொள்வது உங்களுக்கும், உங்கள் குடும்பத்திற்கும் மிகுந்த நன்மையை அளிக்கும். சரியான பக்குவமடையாத மனதிலே தோன்றும் காதல் நல்லதல்ல. படிப்பு முடிந்த பிறகு காதலில் ஈடுபட்டு, உங்கள் வாழ்க்கைத் துணைவியைத் தேர்ந்தெடுத்த பிறகும் உங்கள் பெற்றோரின் அனுமதியில்லாமல் திருமணம் செய்து கொள்ளாதீர்கள்.

பெற்றோரின் ஆதரவும்,ஒத்துழைப்பும், சம்மதமும் உங்களுக்குத் தேவையில்லாமலிருக்கலாம். ஏனென்றால் நீங்கள்தான் உங்கள் சொந்தக் காலிலே நிற்கும் அளவிற்கு வேலையையும், வருமானத்தையும் தேடி அடைந்துவிட்டீர்களே! ஆனால் வாழ்க்கையில் பெரும் பகுதியைக் கடந்துவிட்ட அவர்களுக்கு உங்களுடைய அன்பும் ஆதரவும் தேவை. நீங்கள் வளர்ச்சியடைந்தால் உலகிலேயே அதைப் பார்த்துப் பெருமையடைந்து பூரித்துக் போகின்ற முதல் உள்ளம் உங்கள் பெற்றோர்களுடையதுதான் என்பதை மறந்துவிடாதீர்கள். அவர்களை உதாசீனப்படுத்திவிட்டு எதிர்த்துத் திருமணம் செய்துகொண்டால் அவர்கள் மனம் என்ன வேதனைப்படும் என்பதை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்.

யாருக்குத் துன்பத்தை அளித்தாலும் அது பாவம். நம்முடைய பெற்றோர்களுக்கு நாம் துன்பமளித்தால் அது மகாபாவம்.

தாயிற்சிறந்ததொரு கோயிலுமில்லை
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை
மாதா பிதா குரு தெய்வம்

இந்தப் பழமொழிகளை உலகுக்கு அளித்தது நம் நாடு. ஒரு தாய் தன் குழந்தைகளாகப் படும் கஷ்டங்களுக்கும், வேதனைகளுக்கும், தியாகங்களுக்கும் உலகில் விலையே கிடையாது. ஈடுகட்ட முடியாது. அந்த நன்றிக் கடனைத் தீர்க்க முடியாது.

வட இந்தியாவிலிருந்து தன் யாத்திரையை முடித்துக் கொண்டு தாயின் ஈமச் சடங்களுக்காக தன் பிறந்த ஊரான கேரள மாநில காலடி வந்து அதைச் செய்து முடித்தார் பெரிய மகானான ஆதிசங்கரர். முற்றும் துறந்த மகானுக்குக்கூட தாய்க்கு செய்ய வேண்டிய ஈமச் சடங்கு அவ்வளவு முக்கியமானதாகத் தெரிந்தது. நம்முடைய

தோலையே செருப்பாக்கித் தாய்க்கு அணிவித்தால்கூட தாய்க்குச் செய்ய வேண்டிய நன்றிக்கடன் தீராது.

மகான்கள், மகரிஷிகள் கால்களில் விழுந்து ஆசிபெறுவது என்பதை எல்லோரும் செய்யலாம். ஒருவருடைய தந்தையும் செய்யலாம். ஆனால் அவருடைய தாய் மட்டும் செய்யச்கூடாது. ஏனென்றால் அந்த மகானைவிட உயர்ந்தவள் அவனை ஈன்றெடுத்த தாய், ஆகவே அவருடைய தாய் மகானின் காலில் விழக்கூடாது என்பது நியதி.

காதலி காதல் பரிசாகக் கேட்டாள் என்பதற்காக தன்னுடைய தாயைக் கொன்று அவளுடைய இதயத்தைத் தட்டிலே வைத்து காதலிக்கு அளிக்க சென்றுகொண்டிருந்த ஒரு முட்டாள் கல்தடுக்கித் தடுமாறும்போதுகூட அந்தத் தாயின் இதயம் "மகனே பார்த்துச் செல்.. அடிபட்டு விட்டதா" என்று கேட்கிறதாம். அந்தத் தாயின் மனத்தை நோகச் செய்தால் உங்கள் வாழ்க்கை சிறப்பாக அமையாது. அவ்வாறு பெற்றோர்களை எதிர்த்துத் திருமணம் செய்துகொண்டு வாழ்விலே பெரிய துன்பங்களை அனுபவிக்கும் நிறைய பேர்களை நான் சந்தித்திருக்கிறேன். அவசரப்படாதீர்கள். பொறுமையுடன் இருங்கள். காலப்போக்கில் அவர்கள் உங்களுக்கு அனுமதி அளிப்பார்கள். தனக்கு துன்பம் வந்தாலும் பரவாயில்லை, தன் குழந்தைகளுக்குத் துன்பம் வரக்கூடாது என்றுதான் 99 சதவீத பெற்றோர்கள் நினைப்பார்கள். அவர்கள் உங்கள் காதலின் உறுதியை, அதற்காக நீங்கள் ஏற்றுக்கொள்ளும் துன்பத்தைப் பார்த்துத் தானாக மாறிவிடுவார்கள்.

இந்த விஞ்ஞான நாகரிக உலகத்திலே பெற்றோர்கள் முதுமை அடைந்த நிலையில் அவர்களைச் சரியாக கவனிக்காமல் சுயநல எண்ணம்கொண்டு அலையும் நபர்களை வெகுவாக பார்க்கிறோம். அவர்களெல்லாம் பெரிய பாவத்தைச் செய்கின்றார்கள். மேலைநாடுகளிலே முதியவர்களின் எல்லா நலன்களையும் அரசாங்கமே முதியோர் இல்லங்களின் வாயிலாகப் பார்த்துக் கொள்கின்றது.

முதியவர்கள் என்றால் அங்கு எல்லாக் கட்டணங்களிலும் சலுகை, எங்குச் சென்றாலும் முன்னுரிமை, சிறப்பு வசதிகள் என்று பேணிக்காக்கின்றது. ஆனால் நம் நாட்டிலே நிலைமை வேறு. மேல் நாட்டவரிடமிருந்து நல்ல விஷயங்களைத் கற்றுக்கொள்வதில்லை. தேவையில்லாத, உண்மையில் வாழ்க்கைக்கு உதவாத, சிற்றின்பங்களைத் தரக்கூடியவைகளை மட்டுமே கற்றுக்கொள்கிறோம்.

தொழிலிலே ஈடுபாடு, நேரம் தவறாமை, மேலதிகாரி பார்க்காமலேயே செய்யும் வேலைகளைச் சுத்தமாக, சிறப்பாகச் செய்யும் பாங்கு, சொன்ன வார்த்தைகளைக் காப்பாற்றுதல், வியாபாரத்திலும் வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்துவதிலும் நேர்மை, ஏமாற்றாமலிருத்தல், மற்றவர்களையும் மனிதர்களாக மதித்தல், எல்லாவற்றிக்கும் மேலாக மனித நேயம் இவைகளைக் கற்றுக்கொள்கிறோமா ?

சிந்திப்போம்...

ஜெ.பி.பாலசுப்பிரமணியம்
தருமபுரி

❖❖❖❖❖

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

**31–07–2011** அன்று நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசு பெற்றவர்களின் பட்டியல்

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 1. | Ball Throw (Boys) III & IV Std. | I எஸ். சுந்தர்<br>II ஆர்.எஸ். விக்னேஷ்<br>III டி.எம். இளவரசன் |
| 2. | Ball Throw (Boys) V & VI Std. | I ஜீ. நித்தின்<br>II எம். கார்த்திக்<br>III பி. பிரத்தீப் |
| 3 | Ball Throw (Boys) VII & VIII Std. | I எஸ். சனோஜ்<br>II பி. மிதுன் குமார்<br>III எஸ். தமிழ் செல்வன் |
| 4 | Ball Throw (Boys) IX & X Std. | I எஸ். திலக்<br>II எஸ்.ஜி. முரளி<br>III ராஜா ஸ்ரீபதி |
| 5 | Shotput (Boys) 16 - 20 Years | I ஆர். ரகுஷாந்த்<br>II எஸ். தினேஷ் ராஜ்<br>III கே. பெரியதம்பி |
| 6 | Shotput (Boys) 21 to 30 Years | I ராம் ரோமகன்<br>II பாலாஜி<br>III கு. குமார் |
| 7 | Shotput (Men) 31 to 40 Years | I கே.என். தர்மராஜ்<br>II ஆர். மயில் வாகனன்<br>III ஜெகதீஷ் |
| 8 | Shotput (Men) 41 to 50 Years | I பாலசுப்பிரமணியன்<br>II ஆர்.கே. பாலன்<br>III ஆர். சிவசெல்வம் |
| 9 | Shotput (Men) 51 to 60 Years | I கே. ராஜாமணி<br>II சதாசிவம்<br>III அன்பழகன் |
| 10 | Shotput (Men) 61 and above | I ஏ. சிவசாமி<br>II ஆர். சிவமலை<br>III செங்குட்டுவேல் |
| 11 | Lucky Corner (Men) | I ஆர். சிவசெல்வம்<br>II எஸ். ராமையா<br>III கே. வெங்கடாசலம் |

| | | | |
|---|---|---|---|
| 12 | Running Race (Boys)<br>LKG & UKG 25 Metres. | I<br>II<br>III | சபரீஷ்<br>விஜயரகுபாலன்<br>சக்திவேல் |
| 13 | Running Race<br>I & II Std. (Boys) 25 Metres | I<br>II<br>III<br>Iv<br>v | எஸ். சர்வீஷ்<br>ஆர்தீஷ்<br>ஆர். அனுரித்<br>பி.என். ஆகாஷ்<br>ராகுல் கிஷோர் |
| 14 | Running Race<br>50 Metres (Boys)<br>III & IV Std. | I<br>II<br>III | எஸ். சுந்தர்<br>பி.என். சஞ்சிவ்<br>எஸ். அகிலன் |
| 15 | Running Race<br>75 Metres (Boys)<br>V & VI Std. | I<br>II<br>III | ஜீ. நித்தின்<br>எஸ்.எஸ். சித்திராம்<br>கே.ஆர். சரன் |
| 16 | Running Race<br>200 Metres (Boys)<br>VII & VIII Std. | I<br>II<br>III | எஸ். சனோஜ்<br>பி. பிரேம்<br>எஸ். தமிழ்ச்செல்வம் |
| 17 | Running Race<br>400 Metres (Boys)<br>IX & X Std. | I<br>II | எஸ். திலக்<br>சி.எஸ். ராஜஸ்ரீபதி |
| 18 | Running Race<br>200 Metres (Boys)<br>16 to 20 Years | I<br>II<br>III | ஆர்.சூரியநாதன்<br>பி. கோபி<br>ராஜா |
| 19 | Running Race<br>200 Metres (Boys)<br>21 to 30 years | I<br>II<br>III | கே.கே. மோகன்குமார்<br>எம். வினோத்குமார்<br>எஸ். பாலாஜி |
| 20 | Running Race<br>100 Metres (Men)<br>31 to 40 years | I<br>II<br>III | ஜெ.ஜி. அருன் ராஜா<br>கே. அன்பழகன்<br>எம். துரைசாமி |
| 21 | Running Race<br>100 Metres (Men)<br>41 to 50 years | I<br>II<br>III | பி. சேகர்<br>ஜி. மோகன்ராஜ்<br>ஆர். சிவசெல்வம் |
| 22 | Running Race<br>100 Metres (Men)<br>51 to 60 years | I<br>II<br>III | சதாசிவம்<br>எஸ். அன்பழகன்<br>ரவிசந்திரன் |
| 23 | Running Race<br>50 Metres (Men)<br>61 and Above | I<br>II<br>III<br>IV | ஏ. சிவசாமி<br>சிவமலை<br>அண்ணாமலை<br>செங்குட்டுவேல் |

❖❖❖❖❖❖

# கொசுத் தொல்லையா?

நம் நாட்டைப் பொறுத்தவரை கொசுத் தொல்லையால் அவதிப்படாதவர்கள் குறைவு. பல்வேறு கொசுத் தடுப்பு முறைகளைப் பயன்படுத்தியும் கொசுக்களிடம் இருந்து முழுமையாகச் சுதந்திரம் பெற முடியவில்லையா ? கவலைப்படாதீர்கள். கொசுக்கடிக்கு நிரந்தரத் தீர்வாக ஒன்று வந்துவிட்டது. அது, 'லேசர் சுவர்'. இந்தச் சுவர், அதிகச் செலவு வைக்காமலே பெரும் பரப்பளவை கொசுக்களின் தாக்குதலில் இருந்து தற்காக்கும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். கொலம்பியா பல்கலைக்கழகத்தின் சபோல்க்ஸ் மார்க்கா அமைப்பினர் இந்த லேசர் சுவரை உருவாக்கியிருக்கின்றனர். இது ஒருவரது வீட்டைக் கூடாரம் போல மூடியிருக்கும். ஒரு சொசு கூட இந்தக் கவசத்தைத் தாண்டி வீட்டுக்குள் பிரவேசிக்க முடியாது. குடும்பத்தினிரின் தூக்கத்தையும் கெடுக்க முடியாது.

நாம் இதுவரை பயன்படுத்தி வரும் எல்லாத் தடுப்பு முறைகளையும்விட இது சிறப்பானது என்று உறுதியாகக் கூறுகின்றனர் ஆய்வாளர்கள். கொசுக்களின் உணர்வுறுப்புகளுக்கு வெளிச்சமானது தொந்தரவாக அமையும், குழப்பும் என்று பல ஆண்டுகளுக்கு முன்பே மார்க்கா கண்டபிடித்துவிட்டார். தொடர்ந்து மேற்கொண்ட ஆய்வுகளின் விளைவாக மார்க்கா தனது மனைவி சுஸா, சக ஆய்வாளர் இம்ரே பரோட்ஸுடன் இணைந்து, ஒளிச் சுவர் எனப்படும் இந்த லேசர் தடையை உருவாக்கியிருக்கிறார். கொசுக்களைப் பொறுத்தவரை இது இரும்புச் சுவர் என்கிறார்.

"நாங்கள் யதேச்சையாகத்தான் இதைக் கண்டுபிடித்தோம். நடந்தோ, பறந்தோ வரும் கொசுக்கள் இந்தச் சுவரைத் தாண்டாமல் திரும்பிச் சென்றதைக் கண்டோம்" என்று மார்க்கா கூறுகிறார். ரொம்பச் செலவு வைக்காமல் அதிகப் பரப்பளவை கொசுக்களிடம் இருந்து காக்கும் இந்தத் தடுப்பு முறை பலரையும் ஆச்சரியத்திற்குள்ளாகியிருக்கிறது. தொடந்து பல கோடி ரூபாய் உதவியுடன் இது தொடர்பான கூடுதல் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

நன்றி : வேர்ட்பிரஸ்.காம்.

❖❖❖❖❖

# முகத்திற்கு அழகு தரும் பொட்டு

நெற்றியில் பொட்டிட்ட பிறகு கன்னத்திலோ, முகவாய் பகுதியிலோ ஒரு சிறு சந்துப்புள்ளி வைப்பது நம் நாட்டு வழக்கம் இது, முக அழகுக்கு மேலும் மெருகூட்டும், இதை, திருஷ்டி பொட்டு என்றும் சொல்வர்.

குங்குமத்தை சாதாரணமாக நெற்றியிலிட்டுக்கொள்வதைவிட கொஞ்சம் வெள்ளைவாசலைன் முதலில் இட்டு, அதன் மீது குங்குமத்தை பொட்டிட்டால், பொட்டு நீண்டநேரம் அழியாமல், புத்தம் புதிதாக இட்டது போலக்காட்சி தரும். நெற்றியில் ஏதாவது வண்ண சாந்து அல்லது குங்குமத்தால் பொட்டு இட்ட பிறகு, அதைச்சுற்றி வேறு வண்ணத்தில் ஒரு கோடு தீட்டிக்கொண்டால், திலகம் எடுப்பாக இருப்பதோடு, அழகாகவும் தோற்றமளிக்கும். இந்நாளில் பிளாஸ்டிக் ஷீட்களை வட்ட வடிவில் பொட்டுகளாக கத்தரித்து விற்பனை செய்கின்றனர். மற்றும் கவர்ச்சிகரமான வண்ணங்களில் பொருட்டுகளை அச்சடித்தும் விற்கின்றனர். அவற்றை வாங்கி நெற்றியில் ஒட்டிக்கொண்டு விடலாம். பொட்டிடும் சிரமம் குறையும், நெற்றியில் பொட்டிடும் போது, நுணுக்கமான வேலைப்பாடு இருக்கத்தேவையில்லை. பளிச்சென பார்த்த மாத்திரத்திலேயே கண்களைக் கவரும் வண்ண அமைப்புடன் இருந்தால் போதும்.

சாந்தை உபயோகித்து பொட்டிடும் போது, பொட்டிட்ட பிறகு முகப்பவுடர் பூசிக்கொள்வது, முகத்தைப்பளிச்சென தோற்றுவிக்கும். ஆனால் குங்குமம் உபயோகிக்கும் போது, முதலில் பவுடர் பூசி விடுவது தவிர்க்க இயலாதது. எனினும், பொட்டிட்ட பிறகு, மிக எச்சரிக்கையுடன் முகத்தில் மற்றுமொரு தடவை பவுடரை லேசாக ஒற்றிக்கொள்ளலாம்.

நெற்றி விசாலமாக அமையப்பெற்ற பெண்கள், பெரிய பொட்டாக வைத்துக்கொண்டால்தான் பாந்தமாக இருக்கும். குறுகிய நெற்றியைப் பெற்றவர்களோ, சிறிய அளவிலேயே பொட்டிட்டு கொள்வதுதான் அழகாக இருக்கும். அகன்ற நெற்றியுடைய பெண்கள் மேல் நோக்கி, நீண்ட வாக்கில் கோடாக இழுத்துக்கொள்வது அழகூட்டுவதற்காக அமையும்.

நெற்றியில் பொட்டிட்ட பிறகு கன்னத்திலோ, முகவாய் பகுதியிலோ ஒரு சிறு சந்துப்புள்ளி வைப்பது நம் நாட்டு வழக்கம். இது முக அழகுக்கு மேலும் மெருகூட்டும், இதைத் திருஷ்டி பொட்டு என்றும் சொல்வர். மிகவும் சிவந்த நிறமுடைய பெண்கள்

கரு நிறச்சாந்தால் பொட்டு இட்டால் மிகவும் அழகாக இருக்கும். கருநிறச்சாந்து பொட்டிட்டுக்கொண்டால், எந்த மாதிரி வண்ண உடை அணிந்தாலும், பொருத்தமாகவே இருக்கும். இவர்கள் குங்குமம் இட்டுக்கொள்வதாக இருந்தால், ஆழ்ந்த நிறமாக பார்த்து இட்டுக்கொள்ள வேண்டும்.

டிப்ஸ் : ஸ்டிக்கர் பொட்டு வைத்தப்படியே தூங்கி விடாதீர்கள், அந்த இடமே அலர்ஜி ஆகிவிடும்.

''பஞ்சு, டிஷ்யு பேப்பர் ஆகியவற்றால் அப்படியே முகத்தை துடைக்கக் கூடாது, நனைத்துதான் துடைக்க வேண்டும்.

. கை, கால் நகங்களை, வி வடிவத்தில் வெட்டாதீர்கள். உடைந்துவிடும், ரொம்பவும் ஒட்டவும் வெட்டக் கூடாது, அவ்வாறு வெட்டினால் கீழே சதை நோக்கி வளர ஆரம்பித்து விடும்.

. நகத்தால் வெறுமனே முகத்தின் கரும்புள்ளிகளை நீக்க முயலக்கூடாது. நகத்தைச் சுற்றி டிஷ்யூ பேப்பரை அல்லது மெல்லிய துணியை விரலில் சுற்றிக்கொண்டு தான் நீக்கவேண்டும்.

. பழுத்த பருவையும், வெறும் விரல்களால் அழுத்தக்கூடாது, பஞ்சு அல்லது டிஷ்யூ பேப்பரை விரலில் சுற்றிக்கொள்ள வேண்டும்.

. வெறும் காலுடன் சகதியில் அல்லது ஈரத்துணியில் அதிக நேரம் இருக்கக்கூடாது. சேற்றுப்புண் மாதிரி நோய் தொற்று ஏற்படும். பாத வெடிப்பின் வழியாகவும் கிருமிகள் உடம்பினுள் செல்லும்.

. வறண்ட தோல் உடையவர்கள் அடிக்கடி சோப்பு போட்டு முகம் கழுவக்கூடாது. பால் அல்லது தயிர் தடவியோ அல்லது பேஷ் வாஷ் உபயோகித்தோ முகம் கழுவலாம்

. முகத்துக்கு மேக்—அப் போடும் போதும், பேஸ்பேக் போடும் போதும் கழுத்தை கவனிக்காமல் விடக்கூடாது. முகமும், கழுத்தும் தனித்தனியான கலர்களின் தெரியும்.

. ஒவ்வொரு முறை நகத்துக்கு பாலிஷ் போடும் போதும், இடையே ஒரு நாள் நகம் சுவாசிக்க ஓய்வு தரவேண்டும். இல்லையெனில், நகம் மஞ்சள் கலராகிவிடும்.

❖❖❖❖❖❖

# பில்கேட்ஸான பாட்டி

இடத்திலும் வலத்திலும் தினம்
இரு புறத்திலும் அமர்ந்து
வில்லும் அம்பும் மரவுரியும்
இல்லாத ராம லட்சுமணராய்
வாகனமோட்ட பேரன்மார்
கற்றுத்தர முனைந்தனர்.
பொறுமையாய் அவர் நிதமும்
போதித்தது ஒரு கலையெனலாம்.
போதுமடா சாமிகளா போதும்
பூமியும் ஆகாயமும் ஒன்றாய்த் தெரிகிறது.
இறங்குகிறேன் நிறுத்துங்கள் வண்டியை
எனப்பலவாறு பாட்டி கூவுதல் கேட்டும்
அயராமல் அவர் பழகும்வரை
முயன்று முடிப்பாராம் சுட்டிப் பேரன்மார்.
கணினி என்பது இளையோருக்கானது என
கண்ணாலதனைக் காணவும் தயங்கியதுண்டு.
மௌசின் மீது கையினை வைத்து
மெதுவே அசைத்திருக்க
திரையில் அம்புக்குறியொன்று
தறிகெட்டு ஓடுதல் கண்டு அஞ்சிநடுங்க
பழகிடும் நிலை வரும்வரை அவர்
பார்த்துச் சிரித்தபடி அருகிலிருப்பாராம்.
விரல்களை எழுத்துகள் மீதிருத்தி
வேண்டும் சொற்களை எழுதவைப்பார்.
தனியாக ஓர் அடையாளமும்
தனித்த ரசசியச் சொல்லும்
பதிவுசெய்து பாடம் சொல்லி
பார்த்து மகிழ்வார் பேரன்மார்.
கணினியில் எதையும் பார்த்துக்
கற்றுணரும் நிலைவர பாட்டியார்
தானே ஒரு பில்கேட்ஸாய்
நினைத்துப் பெருமிதமாகும் மேதாவியானார்.
செல்போன் வந்த நேரம்
இது நமக்கானதல்ல இதனைக்
கற்பது முதியவர்க்கு மெத்தக்
கடினமென ஒதுங்கிவிட
இதுமிக எளிதானது
இதற்கேன் பாட்டி பயமென்று
இதற்கும் துணைவந்தனர்.
எப்போதும் போல பகடிகள் பேசி
அதன் செயல்பாட்டினை அவர்
அன்போடு பயற்றுவிக்க காதிலிறுத்தி
ஆனந்தமாயின்று எந்நேரமும் யாருடனும்
அதன்வழி பேசி அம்மையார் மகிழ்வதென்ன ?
இரண்டும் இரண்டும் நான்கென என்றோ
இவருக்கும் கணிதம் கற்பித்ததுண்டு
சரித்திரத்தில் வருடங்கள் தேதிகள்
சற்றே சொல்லிக் கொடுத்ததுண்மை.
காலச் சக்கரம் சுழன்ற சுழற்சியில்
சாலவும் நிலைமை தலைகீழானது.
புகைப்படங்கள் எடுக்கவும் படங்கள்
புதிது புதிதாய் கணினியில் பார்க்கவும்
தொலைக்காட்சியில் கிரிக் கெட், டென்னிஸ்
தவறாமல் பார்த்து ரசிக்கவும்
தரம் வாய்ந்த உலகத்துச் செய்திகளை,
நேர்காணல்களைப் பார்த்து அறியவும்
விரல் நுனியில் புதுப்புது
விஷயங்களை வைத்திருக்கவும்
இனிதாக விளக்கமளித்து இன்று
இவர் அறியாமை களைந்திருப்பது பாலகரே.
உலகத்தில் பாட்டிகள் அனேகர்
உள்ளங்கள் நொந்து வாடி
தனிமை பற்றிப் பேசிப் பேசி
தமது துயரங்கள் கூறி நின்றிருக்க
அருகிருந்து தெளிவூட்டி
ஆர்வமும் முயற்சியும் புகட்டினர்.
அருமருந்தாய் அருகிலிருக்கும்
பேரக்குழந்தைகள் உதவியினால்
முதுமையினைப் புறந்தள்ளி அறிவுமதியாய்
பெருமிதமாய் வாழ்கின்றாள்
இங்கொரு பாட்டியம்மா.

– கவிஞர் மனோன்மணி மாணிக்கவாசகம், சென்னை

❖❖❖❖❖

# சிந்தனைக்கு சில நொடிகள்

வளமான வாழ்விற்கு இவை படிகள்..

| | |
|---|---|
| வணங்க வேண்டிய தெய்வம் | தாய், தந்தை |
| மிக மிக நல்ல நாள் | இன்று |
| மிகப் பெரிய வெகுமதி | மன்னிப்பு |
| மிகவும் வேண்டியது | பணிவு |
| மிகவும் வேண்டாதது | வெறுப்பு |
| மிகப் பெரிய தேவை | நம்பிக்கை |
| மிகக் கொடிய நோய் | பேராசை |
| மிகவும் சுலபமானது | குற்றம் காணல் |
| கீழ்த்தரமான விஷயம் | பொறாமை |
| நம்பக்கூடாதது | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | அதிக பேச்சு |
| செய்யக்கூடாதது | நம்பிக்கை துரோகம் |
| செய்யக்கூடியது | உதவி |
| விலக்க வேண்டியது | சோம்பேறித்தனம் |
| உயர்வுக்கு வழி | உழைப்பு |
| நழுவ விடக்கூடாதது | வாய்ப்பு |
| பிரியக் கூடாதது | நட்பு |
| மறக்கக் கூடாதது | நன்றி |

❖❖❖❖❖

## மணமகள் தேவை

ஜாதகர் பெயர் : பி.கோகுலகிருஷ்ணன்
பிறந்த தேதி : 22–09–1981 செவ்வாய்
பிறந்த நேரம், இடம் : 14.19 IST, ஈரோடு
நட்சத்திரம் : புரசம் பூசம் (பாதம் 2), ராசி : மிதுனம், லக்கனம் : மகரம்
தந்தை பெயர் : கே.என்.பாலசுப்பிரமணியன்
தாயார் பெயர் : திலகவதி
தந்தை தொழில் : Textile Export Business
உடன் பிறப்பு : 1 அக்கா டாக்டர், ஆஸ்திரேலியா, திருமணமானவர் மாப்பிள்ளை டாக்டர்
கல்வி : M.Sc., International Business, London, (UK),
MA., (Marketing) (UK)
தொழில் : Own Textile Export Business, Karur
வருவாய் : மாதம் சுமார் Rs. 1,00,000/-
உயரம் / நிறம் : 5.6 அடி, நல்லசிவப்பு
குலம் / கோவில் : பெருங்குடி குலம், புலியூர் ஸ்ரீ முச்சிலியம்மன்
சொத்து : பங்களா, பூமி, வங்கி வைப்பு நிதி – முதலியன ரூ. 10 கோடி

| | | | |
|---|---|---|---|
| | | | சுந் |
| | இராசி | | செ ரா |
| லக் கே | | | |
| | | புத சுக் | சூரி குரு, சனி |

| | | | |
|---|---|---|---|
| சுக் | | சுந் | சனி |
| சூரி கே | நவாம்சம் | | குரு |
| லக் | | | ரா |
| செ | | புத | |

போன் : 98430 79736 (தந்தை), 9047034549 (தாய்)